மாவட்ட சமூகநல அலுவலகம்,
தஞ்சாவூர்.
ந.க. 3513/அ2/2019
நாள்: 18.02.2020

அலுவலகக் குறிப்பு
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு
பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

பொருள்: சமூகநலம் மாவட்ட சமூகநல அலுவலகம், தஞ்சாவூர் - பாதிக்கப்பட்ட பெண்களுக்கான 24 மணிநேர (24x7) இலவச உதவி மையம் - அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் நியமனம் செய்திட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தக்க அறிவுரை மற்றும் ஆலோசனை பெற வேண்டி கோப்பு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

பார்வை: 1. சென்னை சமூகநல ஆணையர் அவர்களின் நேர்முக கடிதம் 27236/SRCW/2018 நாள்: 04.03.2019
2. மத்திய அரசின் அனுமதி ஆணை எண் 22011/16/2018 WW (e - 65642) GOI – MWCD – WW, நாள்: 12.02.2011

மத்திய அரசு பாதிக்கப்பட்ட பெண்களுக்கான பாதுகாப்பு கருதி "நிர்பயா நிதி" ஒன்று தொடங்கி அந்நிதியினைக் கொண்டு ஒரே குடையின் கீழ் இயங்கும் இலவச மையம் **(One Stop Center)** ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுத்திடல் வேண்டும் எனவும், அம்மையத்தில் இலவச காவல் உதவி, சட்ட உதவி, மருத்துவ உதவி, உளவியல் ரீதியாக ஆலோசனை வழங்கும் வசதி ஏற்படுத்தி (24x7) 24 மணி நேரமும் செயல்பட வேண்டும். மற்றும் அனைத்து வசதிக்கும் 100% நிதி உதவி வழங்கிட உள்ளது எனவும் பார்வையில் கண்டுள்ள அரசின் கடிதங்களில் வழிகாட்டப்பட்டு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் வன்முறையால் தனியார் மற்றும் பொது இடங்களில் குடும்பம், சமூகம் மற்றும் பணியிடத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவு அளிக்கும் ஒரு உதவி மையம் **OSC (One Stop Center)** ஆகும்

மேலும் வயது, சாதி, கல்வி, திருமண நிலை, இனம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் ஆதரவு இல்லாமல் பாலியல், உளவியல் மற்றும் பொருளாதார ரீதியான பிரச்சனைகளை எதிர் கொள்ளும் பெண்களுக்கு ஆதரவு தரும் ஒரு உதவி மையம் **OSC (One Stop Center)** ஆக செயல்படும்.

பாலியல் துன்புறுத்தல், பாலியல் தாக்குதல் வன்முறை, போக்குவரத்தின் போது வன்முறை, ஆட்சி தாக்குதல் ஆகியவற்றிகு உட்பட்ட பெண்களுக்கு ஆதரவு தரும் **OSC (One Stop Center)** மையமாகவும் செயல்படும்.

பாதிக்கப்பட்ட பெண்கள் 18 வயதிற்கு மேல் உள்ளவர்களுக்கு இலவச தங்கும் இடம் 5 தினங்களுக்கு இலவச உணவு, மருத்துவ வசதி, இலவச உளவியல் மற்றும் மருத்துவ வசதி அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மற்றும் அனைத்து உதவிக்கும் 100% நிதி உதவி வழங்கிட உள்ளது எனவும் பார்வையில் கண்டுள்ள கடிதங்களில் வழிகாட்டப்பட்டு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பார்வை 2ல் கண்டுள்ள மத்திய அரசு மேற்படி இலவச மையம் இயங்கிட ரூ.9,41,450/- நிதி அனுமதித்து ஆணை பெறப்பட்டது.

இந்நிதியினைக் கொண்டு கீழ்கண்டுள்ள செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்ட சமூக நல அலுவலகத்தின் கீழ் (24x7) 24 மணி நேரமும் செயல்படும் பாதிக்கப்பட்ட மகளிருக்கான உதவி மையத்திற்காக ஒப்பளிக்கப்பட்ட தொகுப்பூதிய பணியிட நியமனங்களுக்கான அரசு விதி முறைகளில் உள்ளவாறான வயது, கல்வி மற்றும் இதரத் தகுதிகள் மற்றும் ஊதிய விவரங்கள்.

(மகளிர் மட்டும்)

| வ.எ | பதவியின் பெயர் / தொகுப்பூதியம் | வயது (1.1.2020 ன் படி) | பதவியின் எண்ணிக்கை | கல்வித் தகுதி | இதரத் தகுதிகள் |
|---|---|---|---|---|---|
| 1. | கேஸ் பணியாளர் (Case Worker – 1) **Rs.12,000/- PM** | 35 வயது | 1 (ஒன்று) | MSW முதுகலை சமூகப்பணி | தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளூரில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். 3 வருடம் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |

மேற்படி தகுதி வாய்ந்த பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்திடவும், தகவலை மாவட்ட இணையதளத்தில் வெளியிட அனுமதி கோரியும் மாவட்ட ஆட்சியரின் அவர்களின் ஒப்புதலுக்கு கோப்பு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

K. Dham 18/2/20

மாவட்ட சமூக நல அலுவலர்,
தஞ்சாவூர்.

18/2/2020

# தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின்
## பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசு, சமூகநலத் துறையின் கீழ் செயல்படும் தஞ்சாவூர் மாவட்ட சமூகநல அலுவலகத்தின் சார்பில் முற்றிலும் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் (Consolidated Pay) கேஸ் பணியாளர் பணியிடம் தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்ய தஞ்சாவூர் மாவட்டத்தில் வசிக்கும் தகுதிவாய்ந்த வேலை நாடுனரிடமிருந்து (மகளிர் மட்டும்) விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகிறது. இப்பதவிக்கான விண்ணப்பம் மற்றும் தகவல்களை தஞ்சாவூர் மாவட்ட இணையதளத்தில் www.thanjavur.nic.in பதிவிறக்கம் செய்து விண்ப்பிக்கலாம். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை மாவட்ட சமூகநல அலுவலர், அறை எண்.303, மூன்றாவது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு வரும் 02.03..2020 மாலை 05.30 மணிக்குள் அனுப்பப்பட வேண்டும் எனவும் தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம. கோவிந்தராவ், இ.ஆ.ப அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
தஞ்சாவூர்.

மாவட்ட சமூக நல அலுவலர்,
தஞ்சாவூர்.

Recent Passport size Photograph of the application to be affixed

Applicationfromforthe post of

............................................................................................

(Onlyfor Ladies)

| | | | |
|---|---|---|---|
| 1 | Name of the Applicant | :: | |
| 2 | Name of the Father/Husband | :: | |
| 3 | Date of Birth | :: | (Proof to be enclosed) |
| 4 | Age as on 01.06.2019 | :: | |
| 5 | Native District | :: | (Proof to be enclosed) |
| 6 | Marital Status | :: | |
| 7 | Address for communication | :: | |
| 8 | Phone Number/Cell Number | :: | |
| 9 | Educational Qualification | :: | (Proof to be enclosed) |
| 10 | Height/Weight | :: | Height |
| | | | Weight |
| 11 | Additional Qualification | :: | |
| 12 | Community | :: | (Proof to be enclosed) |
| 13 | Details of Working Experience | :: | (Proof to be enclosed) |

Signature of the Application